குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**STC.No.498 /2024**

வழக்கு சாட்சி எ.ம.சா.1

2026ம் ஜனவரி மாதம் 30–ம் நாள் எதிர்மனுதாரர்தரப்பு 1சாட்சியாகிய வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சிவக்குமார், இளநிலை உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரவீந்தர் | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

**(Accused present).**

நாள்: 30.01.2026

**முதல் விசாரணை**

நான் இந்தியன் பேங்க் குமாரபாளையம் கிளையில் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் அடிப்படையில் தற்போது சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். புகார்தார் வங்கி கணக்கு எண் 6873631734 ஆகும். 01.01.2020 முதல் 31.12.2024 வரையிலான கணக்கு விபரங்களை எடுத்து வந்துள்ளேன். **அந்த கணக்கு விபரம் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 01.04.2020ம்தேதி வங்கி கணக்கில் எந்த பணமும் இல்லை. 13.04.2020ம் தேதி ரூ.10,000/– இருந்தது. 01.05.2024ம் தேதி எந்த பணமும் இல்லை. 07.05.2024ம் தேதி ரூ.1,00,000/– எதிரியின் கணக்கில் இருந்து வந்துள்ளது. 25.07.2024ம் தேதி ரூ.50,000/– எதிரியின் கணக்கில் இருந்து வந்துள்ளது. புகார்தாரர் வங்கி கணக்கில் 01.01.2020 முதல் 31.12.2024 வரை ரூ.84,00,000/– ஒரே தொகையாக வரவு வைக்கப்படவில்லை.

**குறுக்கு விசாரணை**

(வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)